பக்கங்கள்: எட்டு NOT FOR SALE Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (09-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:14

# பிரதமராக ரணில் இன்று பதவியேற்பு!

## புதிய அமைச்சரவை அடுத்த வாரம் அமைப்பு



கொழும்பு,டிசெம்பர்9

**பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இன்று பதவியேற்கவுள்ளார். பிற்பகல் 2மணியளவில் பிரதமரின் மாளிகையான அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்பார்.**

**ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்புக்குப் பின்னர் இந்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டது.**

பிரதமர் இன்று பதவியேற்கின்றபோதிலும் வழமைபோன்று அவரது தலைமையிலான புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கமாட்டாது. பெரும்பாலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையே அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவியேற்பு வைபவம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுப் பொறுப்புக்களை யார் யாருக்கு வழங்குவது எத்தனை அமைச்சர்களை நியமிப்பது என்பன தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவையில் பெரும்பாலும் 35 அமைச்சர்கள் இடம்பெறுவர் (08ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சித் தலைவர் யார்? ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் போட்டி!

கொழும்பு,டிசெ.9

புதிய அமைச்சரவையை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வரும் அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் போட்டி நிலை ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் சபாநாயகரும் அண்மையில் ஐ.தே. கட்சியை விட்டு விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்தவருமான அனுரா பண்டாரநாயக்கா, முன்னாள் கப்பல் போக்குவரத்துத் துறை முகங்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூவருக்கும் இடையே எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான போட்டி நிலவுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

நாட்டின் மரபுப்படி ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாக வரும்போது பிரதமர் பதவி வகித்தவரே எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப்படுவது வழக்கம். அதன்படி முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவே அப்பதவிக்கு வரக்கூடியவர். ஆனால் முன்னாள் அமைச்சரும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான மஹிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவர் பதவி தனக்கே தரப்பட வேண்டும் என்று கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் கூறி வருவதாகவும் - அதற்காகத் தான போட்டியைச் சந்திக்கத் தயார் எனக் கூறியிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

## நேற்றிரவும் ஊரடங்கு

கொழும்பு,டிசெ.9

தேர்தலைத் தொடர்ந்து நாட்டில் பரவலாக இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்றும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டதாக பொலீஸ் தலைமையகம் அறிவித்தது.

நாடு முழுவதும் நேற்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை ஆறு மணிவரை அமுலில் இருந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## நாதஸ்வர கலைஞர்கள் கொழும்பு செல்வர்

யாழ்ப்பாணம்,டிசெ.9

புதிய பிரதமராக இன்று பதவியேற்கும் ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டொரு தினங்களில் பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகமான அலரி மாளிகையில் தனது கடமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பிரதமர் அலரி மாளிகைக்குள் பிரவேசிக்கும் சம்பிரதாய பூர்வ

(08ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.புதிய எம்.பிக்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

நடைபெற்று முடிந்த 12ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் இருந்து தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் 6 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி. சார்பில் இருவரும் ஐ.தே.கட்சி சார்பில் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே. விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களும் அவர்கள் பெற்ற விருப்புவாக்குகளின் எண்ணிக்கையும் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ வீ.ஆனந்தசங்கரி | - | 36,217 |
| ★ மாவை சோ.சேனாதிராசா | - | 33,831 |
| ★ ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் | - | 29,641 |
| ★ அ.விநாயகமூர்த்தி | - | 19,472 |
| ★ ந.இரவிராஜ் | - | 19,263 |
| ★ க.சிவாஜிலிங்கம் | - | 17,859 |
| ★ தி.மகேஸ்வரன் | - | 11,598 |
| ★ டக்ளஸ் தேவானந்தா | - | 9,744 |
| ★ நடராசா மதனராஜா | - | 7,350 |

இதேவேளை -

குடாநாட்டில் தமிழர் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி, ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் சார்பில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை வருமாறு:-

**தமிழர் கூட்டமைப்பு**

சீ.வி.கே.சிவஞானம் - 15,513, சுரேஷ் பிரேமச்சந்திரன் - 13,302, ச.அரவிந்தன் - 12,582, (08ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் வன்செயல்களை கண்டிக்கின்றது அமெரிக்கா!

கொழும்பு,டிசெ.9

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புபட்டவர்கள் எவராயினும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்தன்று கண்டியில் இடம்பெற்ற படுகொலைகள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவை என்றும் -

இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் -

அமெரிக்க வெளிவிவகாரத்துறைப பேச்சாளர் பிலிப் ரெய்ரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

தேர்தல் முடிவுகள் மக்கள் ஆணையைத் தெளிவாகப் பிரதிபலிப்பதால் வன்முறைச் சம்பவங்கள் தேர்தலின் இறுதிமுடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தேர்தல் முடிவுகளின்படி ஜனாதிபதி ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும் அரசாங்கம் மற்றொரு கட்சியைச் சார்ந்ததாகவும் இருப்பது இலங்கைக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து பொருளாதார நெருக்கடியை சுமுகநிலைக்குக் கொண்டுவருவதே புதிய அரசாங்கத்தின் முன்னிற்கும் முக்கிய் பொறுப்புக்களாகும் - என்றார். (ம-8-6)

# நான்கு அமைச்சுப் பொறுப்புக்களை தன்வசம் எடுக்க ஜனாதிபதி முயற்சி?

## எனினும் நேற்றைய சந்திப்பில் சுமுக நிலை

கொழும்பு,டிசெ.9

புதிய பிரதமரை நியமிப்பது மற்றும் அமைச்சரவையை அமைப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி மாளிகையில் சுமார் ஒன்றரை மணிநேரம் இச்சந்திப்பு நடந்தது.

இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் எவையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும் பாதுகாப்பு, நிதி மற்றும் தேசிய விவகாரங்கள் தொடர்பாக முக்கியமாகப் பேசப்பட்டதாக அறியவந்தது.

ஜனாதிபதி என்ற வகையில் பாதுகாப்பு, நிதி ஆகிய அமைச்சுப் பொறுப்புகளை தொடர்ந்து தன்வசம் வைத்திருப்பது என்ற முடிவை ஜனாதிபதி பேச்சுகளின்போது வலியுறுத்தியதாகவும் -

இவற்றைவிட சமுர்த்தி, தொடர்பு சாதனத் துறை ஆகிய இரு அமைச்சுப் பொறுப்புக்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஜனாதிபதி விரும்பியதாகவும் -

ஒரு தகவல் தெரியவந்தது.

இதனால் பேச்சின் ஆரம்பத்தில் இரு தலைவர்களிடையேயும் இணக்கமற்ற தன்மை நிலவியதாகவும் -

அறியவந்தது.

அரசமைப்பின்படி ஜனாதிபதியே முப்படைகளின் தளபதி. அந்தப் பொறுப்பும் அதிகாரமும் அவரிடம் இருக்கட்டும். ஆனால் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை தங்களிடம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசுக்கு ஆதரவு வழங்க புளொட் தயார்

கொழும்பு,டிசெ.9

ஆட்சியில் அமரவுள்ள புதிய அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமானால் அந்த அரசுக்குப் பூரண ஆதரவு வழங்குவதற்குத் தாம தயார் என்று புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (ம-6)

## இன்று 3 விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.9

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் இன்று மூன்று விமான சேவைகள் இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பிரயாண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு பயண ஒழுங்குகளுடன் வந்தால் தமது பயணத்தைத் தொடரலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## வவுனியாவில் புளொட் முகாம்களில் தேடுதல்

வவுனியா,டிசெ.9

வவுனியாவில் நேற்று மாலை 4 மணியளவில் புளொட் அமைப்பின் முகாம்கள் பொலீஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

ரம்பைக்குளம், வைரவப் புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களே தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் ரெலோ ஆதரவாளர் இருவர் சுடப்பட்டது தொடர்பான சந்தேக நபர்களைத் தேடியே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

### ஜனாதிபதி விட்டுக்கொடுக்க மறுத்தால்

# மக்கள் போராட்டத்துக்கும் ஐ.தே.க. தயாராக உள்ளது!

நாடாளுமன்ற அதிகாரத்தை ஜனாதிபதி முற்றாக விட்டுக்கொடுக்க மறுத்தால் நாடு முழுவதும் இருந்து 10 லட்சம் மக்களைக் கொழும்புக்கு அழைத்து வந்து பெரும் போராட்டத்தை நடத்த ஐ.தே.கட்சி திட்டமிட்டிருக்கிறது.

பிரதமர் மற்றும் அமைச்சரவைப் பொறுப்புகள் தொடர்பாக நேற்று மாலை ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே பேச்சு நடைபெறுவதற்கு முன்பாக் கட்சி வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டிருந்தன.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு உட்பட எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஜனாதிபதி தன்வசம் வைத்திருக்க முடியாது. அவ்வாறு அவர் தன்னிச்சையாக அதிகாரங்களைக் கையளிக்க மறுத்தால் பெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க ஐ.தே.கட்சி உயர் மட்டம் தீர்மானித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களுக்கான ஜனநாயக சூழலை குடாநாட்டில் உருவாக்கியது ஈ.பி.டி.பியே!

## மக்கள் தீர்ப்புக் குறித்து அக்கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

1989,1994 ஆகிய காலப்பகுதிகளில் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களின் போது நிலவியதை விடவும் தற்போது குடாநாட்டில் ஜனநாயகபூர்வ சூழ்நிலை நிலவுகின்றது. பல்வேறு இழப்புகளையும் துன்ப துயரங்களையும் ஏற்றுச் சகித்துக்கொண்டுதான் இந்த ஜனநாயக சூழலை ஏற்படுத்தினோம். இந்த சூழலைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் மக்களின் அன்றாட வாழ்க்கை அவலங்களைக் களையும் பொறுப்பும் வெற்றியீட்டிய சக்திகளிற்கே உரியது.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் கொழும்பு அலுவலகத்திலிருந்து நேற்று உதயனுக்கு அனுப்பப்பட்ட அந்த அறிக்கையின் முழுவிவரமும் வருமாறு:-

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது பல்வேறு நெருக்கடிகள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியிலும் எமது கட்சியின் சார்பாக வாக்களித்த பல்லாயிரக்கணக்கானவர்களில் ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இத்தேர்தலின் முடிவுகள் குறித்து எமக்கு மகிழ்ச்சி இல்லை. எனினும் முக்கியமான மூன்று விடயங்களில் எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாவதாக நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காணமுடியும் என்பதை பகிரங்கமாக - எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி - வெளிப்படுத்திவந்தோம். புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது உரையின் போது அழகான இந்தத் தீவில் ஒருங்கிசைவாக ஒன்றுகூடி வாழமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது உளப்பூர்வமானதா அல்லது உதட்டளவிலானதா என்பது வேறு விடயம். ஆனால் அவரை இவ்வாறு சொல்ல வைத்தமையானது எமது செயற்பாடுகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

இரண்டாவதாக 1989இன் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களை பதவி துறக்க வைததும் 1994 இல் மக்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதற்கே அனுமதி மறுத்துவந்த சக்திகள் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைப் பயன்படுத்த முடியும் என்ற தீர்மானம் மேற்கொள்ள எமது நடவடிக்கைகளே காரணம் என்பது வெளிப்படை. பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நின்றவர்களை ஒரே மூட்டையில் கட்டி வைத்து பின்னால் இருந்து இயக்கிய சக்திகளின் சதி முன்னிலைக்கு வந்துள்ளது. எனினும் நாம் முன்னெடுத்துச் சென்ற பாதைக்கு இத்தகையவர்களை இழுத்து வந்திருப்பது வெற்றி ஆகும்.

மூன்றாவதாக கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை விடவும் அதிகப்படியான வாக்குகள் இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் எமக்குக் கிடைத்துள்ளன. எனவே எமது வாக்கு வங்கி உறுதியான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. எனவே தேர்தல் முடிவுகள் குறித்து நாம் மகிழ்ச்சி கொள்ள முடியாதபோதும் கவலையடைவதற்கு இல்லை. மேலும 1989 பொதுத் தேர்தலின்போது நிலவியதை விடவும் 1994இன் பொதுத் தேர்தலின்போது காணப்பட்டதை விடவும் ஜனநாயகபூர்வ சூழ்நிலை தற்போது நிலவுகின்றது என்பது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு இழப்புக்களையும் துன்பதுயரங்களையும் ஏற்றுச் சகித்துக்கொண்டுதான் இந்த ஜனநாயக சூழலை நாங்கள் தோற்றுவித்தோம்.

இந்த சூழலைத் தவறாகப் பயன்படுத்திய சக்திகள் கபடத்தனமான குறுக்குவழிகள் மூலம் அவர்களே எதிர்பாராத வகையில் முன்னிலைக்கு வந்துள்ளன. எனவே உருவாகியுள்ள இந்த ஜனநாயக சூழலைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும், போர்ச்சூழலால் துன்பப்படும் மக்களின் அன்றாட வாழ்க்கை அவலங்களைக் களைய வேண்டிய பொறுப்பும் இவர்களுக்கே உரியது.

அத்துடன் புலிகளை பேச்சு மேசைக்கு அழைத்துவரவேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு. கடந்த காலங்களைப் போல இந்தப் பொறுப்புகளிலிருந்தும் கடமைகளிலிருந்தும் விலகிச் செல்லவோ, நழுவிச் செல்லவோ, ஒதுங்கிக் கொள்ளவோ புதிய பிரதிநிதிகள் முற்படமாட்டார்கள் என நம்புகிறோம்.

மேலும் தமிழ்பேசும் மக்களின் மத்தியில் முதன்மைச் சக்திகளாகப் பரிணமித்துள்ளவர்கள் புலிகள் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி சகோதரப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப் பயணத்துக்கு வழி காணவும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பாடுபடுவார்கள் ஆயின் மக்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும். இந்தத் திசை வழிக்கு மாறாகச் செயற்படுவார்கள் ஆயின் தமிழ் பேசும் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரலாம் என்னும் ஆபத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் மககளுக்கான எமது பணிகள் எந்தவித இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடரும் என்று உறுதியளிக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தந்தையின் பாதையில் நின்று சுதந்திரத்துக்காக உழைப்பேன்!

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

எனது தந்தையார் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வழியில் நின்று தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்துக்காகவும் நீடித்த சமாதானத்துக்காகவும் நான் பாடுபடுவேன்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜ.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவர் விடுத்த ஓர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் போட்டியிட்ட என்னை உங்கள் பிரதிநிதிகளுள் ஒருவராகத் தெரிவு செய்தமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது தந்தை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வழியில் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்துக்காகவும் நீடித்த சமாதானத்துக்காகவும் நான் பாடுபடுவேன் என்ற நம்பிக்கையில் என்னைத் தெரிவுசெய்த அனைத்து வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



உங்கள் நம்பிக்கைகளே எனது அரசியல் வாழ்வின் இலக்குகளாக இருக்கும் என்பதனை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறி வைக்க விரும்புகிறேன். உங்கள் இல்லங்களுக்கு வந்து நேரில் நன்றி கூற விரும்பினாலும் காலச் சூழ்நிலைகள் வசதியீனமாக இருப்பதால் இதனை நான் நேரில் வந்து உங்களிடம் தெரிவிப்பதாகவே ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் இலட்சியத்துக்காகவும் நலனுக்காகவும் எனது தந்தையைப் போல் என்றும் உழைப்பேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தொடர்ந்தும் மக்கள் சேவை புரிவேன் என்கிறார் சிவஞானம்

## வாக்களித்தோருக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் 7ஆவது இடத்தைப் பெற்ற சீ.வி.கே.சிவஞானம் தனக்கு வாக்களித்தோருக்கு நன்றி தெரிவித்து செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு விருப்பு வாக்கில் 7 ஆவது இடத்தைப் பெற எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டுறவுத் துறையினருக்கும், தேர்தல் பணிகளில் எனக்கு உதவிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்த அனைத்து வாக்காளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். தேர்தலில் வெற்றியடையவில்லை என்றாலும் தொடர்ந்து இந்த மண்ணில் வாழ்ந்து என்னாலான பொதுச் சேவையைத் தொடர்வேன் என்பதைக் கூறி என்னுடன் ஒத்துழைத்த சகலரையும் எனது பணிகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டுகிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

# கூட்டமைப்பின் வெற்றிவாகை தமிழர் வரலாற்றில் திருப்புமுனை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் வெற்றி தமிழர் வரலாற்றில் புதியதொரு திருப்பம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்க கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் கூட்டமைப்பின் கொள்கைகள், கோரிக்கைகளை ஏற்று, மழையையும் பாராது லட்சக் கணக்கில் நீங்கள் வாக்களித்ததன் மூலம் தமிழர் வரலாற்றில் புதியதொரு சரித்திரம் படைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டம் மாத்திரமல்லாமல் வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் அலை அலையாக வாக்களித்ததானது, வலுவான தமிழர் பிரதிநிதித்துவம் ஒன்றை நாடாளுமன்றம் அனுப்ப வழி சமைத்துள்ளது.

பணத்துக்கும் சலுகைக்கும் நாம் விலைபோபவர்கள் அல்லர் என்பதையும், தமிழ்மக்களின் கௌரவம், தன்மானம், சுயமரியாதை என்பனதான் தமிழனின் அடையாளங்கள் என்பதையும் தமிழ்மக்கள் நிலைநிறுத்தியுள்ளனர். அது மாத்திரமல்லாமல், அபிவிருத்தியும், சோறுமல்ல உரிமையும், சுதந்திரமும்தான் தமிழரின் அடிப்படைத் தேவை என்பதையும் மக்கள் வலியுறுத்தியுள்ளீர்கள்.

மக்களின் வாக்குப்பலம் என்பது உலகத்துக்கும், சிறிலங்கா அரசுக்கும் பல செய்திகளை உரத்துச் சொல்லியுள்ளது. யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடைகளை அகற்றல், விடுதலைப் புலிகள் மீதான தடைகளை அகற்றல், மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சு என்பவைதான் இன்றைய உடனடி விடயங்கள் என்பதை மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் மக்கள் கூறியுள்ளனர்.

மக்களின் எழுச்சி விடுதலைப் போராட்டத்தில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவிக்கும், மக்களின் உறுதி எங்கள் எல்லோருக்கும் பாரிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இவ்வெழுச்சியும், உறுதியும் ஏற்பட தமது முழுப் பங்களிப்பையும் வழங்கிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு நாங்கள் தலைவணங்குகின்றோம்.

மழை, வெய்யில் பாராது வீதி வீதியாக, வீடு வீடாக அவர்கள் செய்த பிரசாரம், மக்களுக்கு உண்மையை புரிய வைத்தது. மாணவர்கள், மாணவிகள் என்ற வேறுபாடின்றி, ஒரு சமுதாயப் பொறுப்பைத் தமது தலைமேல் எடுத்து அதனைக் கௌரவமாகச் செய்து முடித்ததென்பது வரவேற்கப் படவேண்டியது. மாணவர் நினைத்தால் மலையையும் அசைக்கலாம் என்பதை அவர்களது செயற்பாடு உணர்த்தி நிற்கின்றது.

இது மாத்திரமல்ல பொது நிறுவனங்கள், மத அமைப்புகள், பரந்துபட்ட மக்கள் அமைப்புக்கள் எல்லாமே தமது கடமையையும், பொறுப்பையும் செவ்வனே செய்துமுடித்துள்ளன.

இன்று தமிழர் கூட்டமைப்புக்கு பாரிய ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்ன காரணத்திற்காக கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ, அதன் கொள்கைகள் நிறைவேற்றப் படவேண்டும். அதற்கான வேலைத் திட்டங்களைக் கூட்டமைப்பு தயாரிக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் அப்பால், குறுகிய கட்சி நலன்களை விடுத்து கூட்டமைப்பின் கொள்கைகளை செயற்படுத்த தமிழர் கூட்டமைப்பின் ஐக்கியம் பாதுகாக்கப் படவேண்டும். கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் இவற்றைக் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவு செய்ய மக்கள் அளித்த விருப்பு வாக்குகள் போதாமலிருந்தாலும் கூட, மேடைக்கு மேடை நான் கூறிய கருத்துக்களுக்காக நான் உறுதியாகச் செயற்படுவேன் என்பதைத் தெளிவாக கூறிக்கொள்வதுடன், அவற்றை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் எல்லோரும் எம்முடன் தோளுடன் தோள் நிற்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பொதுவாக தமிழர் கூட்டமைப்புக்கும், பிரத்தியேகமாக எனக்கும் தங்கள் விருப்பு வாக்குகளை அளித்த அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் நான் சிரம் தாழ்த்தி தலைவணங்குவதுடன், எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழர் கூட்டமைப்புக்காகவும், எனக்காகவும் பிரசாரம் செய்த அத்தனை தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக, சகல அடக்குமுறைகளையும் மீறி தீவுப்பகுதியின் உண்மையான வாக்காளர்களான ஐயாயிரம் பேரும் கூட்டமைப்புக்கு வாக்களித்ததானது, அடக்குமுறையாளர்களுக்கு மக்களின் மன உணர்வுகளை தெளிவுபடுத்தி இருக்கும் உண்மையான வாக்காளர்கள் எம்முடன் இருக்க, கள்ளவாக்குகள் பதினைந்தாயிரம் போடப்பட்டதால் இரண்டு ஆசனத்தை ஈ.பி.டி.பி. பெற்றுக்கொண்டாலும், மக்கள் அதன் உண்மை வடிவத்தை விளங்கிக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். தீவக மக்களின் மௌனப் புரட்சிக்குத் தலைவணங்குவதுடன், எமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

### வேம்படி மாணவிகளுக்கு!

வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினால் நடத்தப்படும் காலஞ்சென்ற ரி.வி.வடிவேலு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதிக்கான சீட்டிழுப்புக்குரிய ரிக்கெற் புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகளும் ஏனையோரும் எதிர் வரும் 14ஆம் 15ஆம் திகதிகளில் அவற்றை மீளத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் திருமதி மனோகரி பராபரன் அறிவித்துள்ளார்.

இவ்விரு தினங்களும் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் கல்லூரியில் ரிக்கெட் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அநாகரிக அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரப் பாடுபடுவோம்!

## சுபத்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.9

அநாகரிகமான அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நாகரிகமான ஒரு புதிய பாரம்பரியம் எதிர்காலத்தில் தோற்றுவிக்கப்பட அனைவரும் ஒத்துழைப்போம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணி உறுப்பினர் த.சுபத்திரன்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது அணியின் மீன் சின்னத்திற்கு வாக்களித்த மக்களுக்கும் பல்வேறு சிரமங்களுக்கு மததியில் ஜனநாயக விழுமியங்களைப பேணி எமது கட்சிக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு மற்றும் பல்வகை உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ், சிங்கள மக்கள் யுத்தம் முடிவுக்கு வரும், சமாதானம் மலரும், அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடனேயே வாக்களித்துள்ளனர். இவற்றைச் சாத்தியமாக்குவதற்கு உண்மையான, நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான முயற்சிகளுக்கு எமது ஆதரவும், ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு.

இம்முறைத் தேர்தல், வன்முறைகள் நிறைந்ததாகவும், உயிர்ப் பலிகள் அதிகரித்தும் காணப்பட்டது. இத்தகைய அநாகரிகமான அரசியல் கலாசாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாகரிகமான ஒரு புதிய பாரம்பரியம் எதிர்காலத்தில் தோற்றுவிக்கப்பட அனைவரும் ஒத்துழைப்போம். (ம)

### விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் யாழ்மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு இன்று ஞாயிற்றுக்கிழமை திருமறைக கலாமன்ற அரங்கில் நடத்தவிருந்த பொதுநிலையினர் தினவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

புதிய வகுப்புகள்
Gr. 3 முதல் O/L வரை.
சிறந்த பெறுபேறுகளுக்கு
SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி. (C/19684)

மணமங்கல வாழ்த்து!
எமது நிறுவனத்தின் சிரேஷ்ட கணித ஆசிரியர்
திரு.இரா.யோகேஸ்வரன் அவர்களையும்
அவர்தம் பாரியார் தெய்வநிதி அவர்களையும்
இன்றைய மணவாளக் கோலத்தில் பல்லாண்டுகாலம்
சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
நல்லூர், சயன்ஸ் அக்கடமி. (95739)
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு அறிவிப்பில் குழப்பம்; குடாநாட்டு மக்கள் திண்டாட்டம்!

யாழ்ப்பாணம்,டிசெ.9

கடந்த இரு தினங்களாக ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வரும் நேரம் பற்றிய அறிவிப்புத் தொடர்பாக நிலவிய குழப்பத்தால் குடாநாட்டுமக்கள் திண்டாடிப் போயினர்.

கடந்த வியாழனன்று நடைமுறைக்கு வந்த ஊரடங்கு உத்தரவு, மறுநாள் வெள்ளி விலக்கப்பட்டது. மறுபடி ஊரடங்கு நடைமுறைக்கு வருவது பற்றிய தகவல் எதுவும் அப்போது தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

இதனால் பொதுமக்கள் தமது வழமையான அலுவல்களைக் காலையில் ஆரம்பித்தனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.45 மணிக்கான இலங்கை வானொலிச் செய்தியில் இரவு 7 மணிமுதல் காலை 6 மணி வரை மறுபடி நாடளாவிய அளவில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் 30 நிமிடங்களில் யாழ். சேவையில் பிற்பகல் 3 மணிக்கு ஊரடங்கு உத்தரவு குடாநாட்டில் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் குழப்பமடைந்த மக்கள், யாழ்.பொலீஸ் நிலையத்தை தொடர்புகொண்டபோது இரவு 7 மணிக்கே மறுபடி ஊரடங்கு நடைமுறைக்கு வரும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழப்பமான தகவல்களால் பொதுமக்கள் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், இலங்கை வானொலி, தனது முன்னைய செய்தியில் தெரிவித்ததற்கு முரணாக - பிற்பகல் 3 மணிக்கு ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவித்தது.

இதனால் வீடுகளிலிருந்து தொலைதூரம் சென்றவர்கள் - குறிப்பாக முதியவர்களும், பெண்களும் - அவரச அவசரமாக வீடு திரும்ப அவதிப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஊரடங்கு எப்போது அமுலுக்கு வரும் என்பது பற்றி நேற்றுப் பகலும் மக்கள் மத்தியில் குழப்பம் நீடித்தது.

அவசர நிலைமைகளுக்காக ஊரடங்கை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், அதற்கான அறிவிப்பை குழப்பமின்றித் தெளிவாக விடுத்தால் வீணான சிரமங்களைத் தவிர்க்கலாம் என்று பொதுமக்கள் அங்கலாய்த்தனர். (ஓ)

## அதிபர் நியமனம்

தென்மராட்சி,டிசெ.9

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய செல்லத்துரை சேதுராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய சி.சிற்றம்பலம் அண்மையில் ஓய்வுபெற்றுள்ளதை அடுத்து இவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

# மக்கள் ஆணையைப் பயன்படுத்தி சமாதானத்தை நிலைபெறச் செய்க!

## இந்துமத குருபீடம் செய்தி

கொழும்பு,டிசெ.9

மக்கள் வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐ.தே.கட்சி இலங்கை மண்ணில் சாந்தியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

சர்வதேச இந்துசமய குருபீடம் இவ்வாறு வேண்டுகோள்விடுத்துள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றிபெற்றது குறித்து கட்சிக்கும், கட்சித் தலைவர், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் மேற்படி குருபீடம் வாழ்த்துச் செய்தி ஒன்றைவிடுத்துள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மக்கள் புதிய மாற்றம் ஒன்றை வேண்டியே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகப்படியான வாக்குகளை அளித்து புதிய அரசமைக்கும் பொறுப்பினை அந்தக் கட்சிக்கு வழங்கினர்.

தற்போது ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றம் வெறும் கதிரை மாற்றமாக அமையாமல் கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதுவே மக்களின் விருப்பமுமாகும்.

ஆட்சித் தலைவர்களின் நிலையிலும் குணமாற்றம் தேவை. நிதானம், தூரநோக்கு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் பண்பு, எதிரியையும் அணைத்துச் செல்லும் இயல்பு என்பன புதிய ஆட்சியில் ஏற்பட வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,டிசெ.9

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மணடபத்தில் நடைபெறுமென சங்கச் செயலாளர் ம.விவேகானந்தன் அறிவித்துள்ளார். (ஐ-117)

# நாவலர் குருபூசையை ஒட்டிய கட்டுரைப் போட்டி முடிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு யாழ்.சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன.

பரிசுபெற்றோர் விவரம் முறையே வருமாறு:-

செல்வி மோகனா மோனகுரு (வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி), செல்வி கார்த்திகா குணரட்ணம் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), செல்வி றஞ்சனாதேவி தங்கராஜா (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி).

மேற்குறிப்பிடப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு விரைவில் நடத்தப்படும் என யாழ்.சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ஐ-7)

# அரியாலையில் இரு தினங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி!

யாழ்.மாநகரசபைப் பிரிவுக்கு உட்பட்ட அரியாலைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது.

11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை அரியாலை காந்தி சனசமூக நிலையம், முற்பகல் 11 மணி தொடக்கம் ஒரு மணிவரை அரியாலை கலைமகள் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை அரியாலை திருமகள் சனசமூக நிலையம்.

12ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை நல்லூர் சென்.பெனடிக்ற் பாடசாலை, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நரியன்குண்டுச் சந்தி தேவாலய வளவு, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நல்லூர் [illegible] சனசமூக நிலையம். (ஐ-7)

# மழை விட்டும் தேர்தல் தூவானம்...

மானிப்பாயில் அறிமுகமான அந்த நண்பர் புரட்சிகரமானதும் கவர்ச்சியானதுமான ஒரு புனை பெயரைச் சூடியிருந்தவர். அந்தப் புனைபெயரில் சொன்னால்தான் அவரைத்தெரியும் என்ற அளவுக்கு பிரபலமாகியிருந்தது அப்பெயர். ஆனால் நாளதுவரை அவர் எழுத்தாளன் என்ற வகையில் எதையும் எழுதிக் கிழித்ததில்லை... ஏதோ சில அந்தியேட்டி மலர்களில் துயர்பகிர்வுக் கவிதைகள் (?) எழுதியதைத்தவிர...

நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் திடீரென்று ஒருநாள் கொழும்பு வீதியொன்றில் தாமாகவே வந்து எனக்கு அறிமுகமாகிறார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?

அவர் ஒரு கிளியரிங் ஏஜென்சி நடத்திவருவதாகத் தெரிந்து வைத்திருந்தேன். அதாவது கப்பலில் அல்லது விமானத்தில் நமக்கு வருகின்ற பொதிகளை நாம் பல விதிமுறைகள், நடைமுறைகளைப் பின்பற்றி பல அலைக்கழிவுகளுக்குப் பின்னர்தான் எடுக்கமுடியும். ஆனால் இந்த வகை முகவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் அவர்கள் தங்களுக்குரிய கட்டணத்துடன் எளிதில் எடுத்துத் தந்துவிடுவார்கள். அதுபற்றி நண்பரிடம் விசாரித்தபோதுதான் அதனை விட்டுவிட்டு, அப்போது அச்சுவேலைகளை ஒப்பந்தமாக எடுத்துச் செய்துவருவதாகச் சொன்னார். கையிலே கலண்டர், டயறிகளின் மாதிரிகளையும் வைத்திருந்தார். அலுவலகங்கள், வர்த்தக நிலையங்களிடமிருந்து அச்சு வேலைகளுக்கான கட்டளைகளைப் பெற்று அவைகளைத் தனக்கு ஏற்ற அச்சகங்கள் மூலமாக அச்சிட்டு வழங்கும பணி. அப்பொழுதும் ஒரு மார்கழி என்பதால் நண்பர் கலண்டர், டயறி ஒப்பந்தங்களிலும் தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்.




நல்லது எழுத்தாளனுக்கு (எழுதாத) ஒத்துப் போகக்கூடிய தொழில்தான் என்று எண்ணிக் கொண்டேன்.

அடுத்த தடவை, அண்ணாந்து பார்த்தால் கழுத்தை வலிக்கும் ஒரு கட்டடத்துக்கு முன்னால் அவரைச் சந்தித்தேன். அது தன்னுடையதுதான் என்றார். அதாவது அந்தக் கார்ப்பறுதி நிறுவனத்தின் முகவராகத் தாம் பணியாற்றி வருவதாகச் சொன்னார். (ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவும் போது பழையதை 'அம்போ'வென்று கைவிட்டு விடுவது அவரின் இயல்பு)

அதற்குமடுத்த தடவை அவரைச் சந்தித்தபோதுதான் அப்போது வீட்டுத் தரகுகள் - திருமண ஒப்பந்த வேலைகள் செய்துவருவதாகக் குறிப்பிட்டார். வாடகை வீடு பொருத்திக் கொடுத்தால், மாத வாடகை எவ்வளவு பேசப்படுகிறதோ, அப்படியான ஒரு தொகையில் இரண்டு பகுதியினரும் தனித்தனியாக தரகாகக் கொடுத்தாக வேண்டும். திருமணம் பொருந்தி வந்தால் ஒவ்வொரு லட்சத்திற்கும் தரகு ரூபா ஐயாயிரம்... (இது அப்போதைய அங்குள்ள விலைவாசி)

நண்பர் விரைவில் லட்சாதிபதியாகி விடுவார். அதிலே நான் பங்குகேட்க விரும்பாதவனாக... அவர் எங்கிருந்தாலும் வாழவேண்டும் என வாழ்த்தி விடை பெற்றேன்.

'கொழும்பிலே நண்பகல்' நெருங்கும் சமயங்களிலே எங்கு பார்த்தாலும் சாப்பாட்டுப் பார்சல்கள் பல்வேறு உணவகங்களின் பெயரால் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதிலும் துறைமுகப்பகுதி எங்கும் விற்பனைக்கு வருகின்ற துறைமுகச் சாப்பாட்டுப் பார்சல்களுக்கு அங்கு நல்ல வரவேற்பு... கடைசியாக அவரைச் சந்தித்தபோது தானும் அப்படி ஒரு விநியோகச் சேவையை நடத்துவதாகக் கூறினார். ஏற்கனவே எடுத்த கணிப்பின்படி சமையல்காரர்களை வைத்துச் சமைத்துப் பார்சல்கள் கட்டி முச்சக்கரவண்டி மூலமாக விநியோகம் செய்வது...

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.. உப்பிட்டவரை (அளவாகப் போட்டிருக்க வேண்டும்) அவர்களும் (உயிர் பெற்றவர்களும்) உள்ளளவும் நினைப்பார்கள்.

கவியரசு கண்ணதாசன் தமிழ்நாட்டு அரசியலைக் கேலிசெய்யும் வகையில் (முக்கியமாக எம்.ஜி.ஆரை மனதிற்கொண்டு) ஓரிடத்தில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். "மேல்நாடுகளிலே தேர்தலில் வாக்களிப்பவருக்கே சில அடிப்படைத் தகுதிகள் இருக்கவேண்டும். இங்கோ வேட்பாளர்களாக நிற்பவருக்கே அத்தகுதிகள் தேவையில்லை என்றாகி விட்டது"

தற்போதைய தேர்தல் முறையில் இங்கு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு நுட்பமான அறிவும் தகுதியும் தேவைப்படுகிறது. ஆனால் வேட்பாளர்களுக்கு...?

முன்னரெல்லாம் இங்கு கட்சிகளில் இருப்பதற்கும் தேர்தலில் நிற்பதற்கும் சில தகுதிகள் இருந்தாக வேண்டும். மூத்த உறுப்பினர்களாகத் திகழ்ந்தவர்களிலிருந்தே வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். சிவநாயகம் தொடக்கம் சிவனேசன் வரையான பிரச்சினைகள் நீங்கள் அறிந்ததுதானே! இப்ப என்னடாவென்றால் "நான் போன தேர்தலில் அந்தக் கட்சி... இப்போது இந்தக் கட்சி... இவர்... என்னை நீங்கள்..."

பட்டிமன்றம், வழக்காடு மன்றங்களில் சென்ற வாரம் 'சீதைதான் கற்பிற் சிறந்தவள்' என்று பேசியவர் இந்தவாரம் 'இல்லை கண்ணகிதான் அதிற் சிறந்தவள்' என்று வாதாடுவது போல... வழக்காளிக்கு பேசுவதற்கு பொருந்தி வராவிட்டால் எதிராளிக்கு வழக்குப் பேசுவதற்கு முன்வரும் சட்டத்தரணிகள்போல... அதனால்தானோ நாடாளுமன்றத்துக்குப் போவதற்குத் தகுதியானவர்கள் சட்டத்தரணிகள்தான் என்று சொல்லுகிறார்களோ?

ஆரம்பத்திலே குறிப்பிட்ட அந்த நண்பருடன் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு எந்தவிதத் தொடர்பும் கிடைக்கவில்லை. அதனால் 'இராமன் எத்தனை ராமனடி' என்பதுபோல அவர் இப்போது என்ன தொழிலில் - அதுவும் எத்தனையாவது தொழிலில் இருக்கிறார் என்ற விவரமும் தெரியவில்லை... என்னவோ அவருக்கு அப்படி ஒருராசி...

அதுசரி... அந்த ஆளைப்போய் நண்பன் என்று குறிப்பிட்டதற்குக் காரணம் என்ன? 'உன்னுடைய நண்பன் யார் என்று சொல். நீ யார் என்பதை நான் சொல்கிறேன்' என்ற ஆராய்ச்சி வேறா?

அதுவா...? வந்து...வந்து அவர் எனது முன்னாள் நண்பன்... அதாவது முன்னாள் எம்.பி. என்பது போல...

~ சண் அங்கின்

# யேசுவின் வருகை நெருங்குகிறது

யேசுவின் வருகைக்கு ஆயத்தம் செய்கின்ற இந்த அற்புதமான காலத்திலே இறைவன் நம் ஒவ்வொருவரையும் தம் ஊழியன் திருமுழுக்கு அருளப்பர் வழியாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறார். திருவருகைக் காலம் அருள் பொழியும் காலம், அற்புதங்கள் நிறைந்த காலம், மனமாற்றம் கைகூடுகிற காலம்.

## ஞாயிறு நற்பிரசாதம்

*மனமாற்றம்:* மாற்றம் என்பது இயற்கையின் நியதி. மனித வாழ்வுக்கு மாற்றம் இயல்பானது. மனித வளர்ச்சிக்கு இது இன்றியமையாதது. தனிமனிதனுக்கு மட்டுமன்றி சமூகங்கள் முன்னேற்றம் அடைய முடியும்.

மாற்றங்களுள் அடிப்படையானதும், ஆழமானதும் மனிதனின் மன மாற்றமே. மனம் மாறும்போதுதான் மனிதன் மாறுகிறான். உள்ளங்கள் மாறும்போதுதான் உண்மையாகவே உள்ளங்கள் மாறுகின்றன. மனமாற்றத்தால்தான் மனிதர்கள் மாமனிதர்கள் ஆகிறார்கள். அதுபோல் மனித வரலாற்றில் மாபெரும் வளர்ச்சிக்கெல்லாம் தொடக்கமாய் அமைந்தது ஒரு சில மகான்களின் மனமாற்றமே.

சின்னப்பரின் மனமாற்றத்தால்தான் ஒரு தலைமுறைக் காலத்துக்குள்ளாகவே கிறிஸ்தவம் ஓர் உலக இயக்கமாக உருவெடுத்தது. இவ்வாறு ஒவ்வொரு வளர்ச்சிக்கும் மனமாற்றம் அவசியம்.

*திருப்புமுனை:* கிறிஸ்து இவ்வுலகில் பிறப்பது உலக வரலாற்றிலேயே ஒரு முன்னேற்றத் திருப்புமுனையாக அமையப்போவது என்பது இறைவனின் திட்டம். அந்த முன்னேற்றத்தை அனுபவிக்க ஒவ்வொரு மனிதனும் அந்த யேசுவை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் அடைய வேண்டும்.

அதற்கு யூத சமூகத்தில் ஒவ்வொரு மனிதனின் மனமாற்றமும் அவசியமாக அமைந்தது. இதுவே திருமுழுக்கு அருளப்பரின் பணியாகவும் இருந்தது. அவர் மனமாற்றத்தின் அடையாளமாகத் திருமுழுக்கு வழங்கினார். அடிப்படையில் அது ஒரு ஆன்மீக மாற்றம். அதாவது மக்கள் இறைவனுடன் கொள்ளும் உறவில் ஏற்பட வேண்டிய மாற்றம். லூககா 3:9இல் காண்பதுபோல அவருடைய வருகை நல்லவர்களுக்கு வாழ்வாகவும், தீயவர்களுக்கு அழிவாகவும் அமையும். அவரது வருகைக்காக மக்கள் தங்களையே தயாராக வேண்டும்.

இந்த ஆன்மீக மாற்றம் மூன்று வழிகளில் வெளிப்படவேண்டும்:-

☆ மத் 3:7-10இல் காண்பதுபோல ஏனோதானோ என்னும் உளப் போக்கிலிருந்தும் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது எனும் மெத்தனப் போக்கிலிருந்தும் எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்னும் ஆர்வமோ அவசரமோ அற்ற மந்தநிலையிலிருந்தும் மாற்றம்.

☆ இது ஒரு வாழ்க்கை மாற்றம். லூக் 3:11-14இல் காண்பது போல் நீதி நெறியிலும் சகோதரப் பகிர்வு முறையுடனும் வாழ அழைக்கின்றார். "இரண்டு அங்கி வைத்திருப்பவன், இல்லாதவனோடு பகிர்ந்துகொள்ளட்டும், உணவு உடையவனும் அவ்வாறே செய்யட்டும்...".

☆லூக் 3:4-6இல் காண்பதுபோல் இது ஒரு சமூகமாற்றம். சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளெல்லாம் நீங்கி வாழ அறைகூவல் கொடுக்கிறார்.

இன்றைய நாள்களில் இந்த அறைகூவல் நமக்குக் கொடுக்கப்படுகிறது. திருச்சபைத் தாயானவள் நாம் ஒவ்வொருவரும் உண்மையான மனமாற்றம் அடையப் பாவமன்னிப்பு திருவருடசாதனத்தைத் தந்துள்ளாள். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு இத்திருவருட்சாதனத்திலே பங்குகொண்டு மனமாற்றம் அடைவோம். நம்மைத் தேடிவரும் யேசுவை நம் வாழ்வில் சந்திப்போம்.

அருள்திரு.
அ.ம.ஸ்ரீபன் சீ.ஆர்.

அன்பே உருவான இறைவா, உமது மீட்புத் திட்டத்தின் பலன்கள் எல்லாவற்றையும் அடையத் தூய உள்ளம் அவசியம் என்பதை நீர் வெளிப்படுத்தியுள்ளீரா? பாவ நிலையிலிருந்து மனம் மாற எந்த முயற்சியும் எடுக்க முடியாதவர்களாக இருக்கிறோமையா. இதனால் எந்த முன்னேற்றமும் அடைய முடியாமல் வாழ்வே சலிப்படைந்து கஷ்டங்களும், துன்பங்களும் கவலைகளும் கடன் தொல்லைகளும் வாட்டுதையா. இந்தப் பாவ நிலையிலிருந்து விடுபட்டு "பாவமன்னிப்பு" திருவருட்சாதனம் பெற்று உமது அன்புக் குழந்தைகளாக மகிழ்வோடு வாழ வரம் தாருமையா. ஆமென்.

நன்றி: பாதுகாவலன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலாசார உத்தியோகத்தர்களின் செயலமர்வு திட்டமிட்டபடி நடக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியும், செயலமர்வும் திட்டமிட்டபடி எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை முதல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்தச் செயலமர்வு தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்.

இந்தச் செயலமர்வின் ஆரம்ப வைபவத்தில் யாழ்.அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

யாழ்குடாநாட்டைச் சேர்ந்த மூத்த கல்விமான்கள் பலரும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)


## விற்பனைக்கு

புதிய கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்து மடல்களும், கொம்பிளிமென்ட் படக்கலண்டர்கள் பல டிசைன்களிலும் மற்றும் போட்டோ பிரதி மெஷின்களுக்கான (CANON, SHARP) உதிரிப்பாகங்கள் (SPARE PARTS), ரோணர் (TONER) முதலியவையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

C.S.மூர்த்தி,
குமரன் விடுதி,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(95708)


## நன்றி நவில்கின்றோம்

20.11.2001இல் காலமான எமது குடும்ப அன்னை

### மேரி திரேசா பூராணி மகேசன்

அவர்கள்

நோய்வாய்ப்பட்டு இருந்தவேளை அவரைத்தரிசித்து ஆறுதல் கூறியும், செபித்தும், அவருக்கு மருத்துவ உதவிகளை வழங்கியும் வந்த வைத்தியர்கள், தாதிமார் மற்றும் குருக்கள், கன்னியாஸ்திரிகள், புனித வின்சன் டீ போல் சபையினர், உற்றார், உறவினர்கள், நணபர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், அன்னாரது மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து எமக்கு ஆறுதல் அளித்தும், மரணச்சடங்கில் கலந்துகொண்டும், வழிபாடுகள் நடத்தி செபித்தும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும், மலர்வளையங்கள் சாத்தியும் எமது துயரில் பங்குகொண்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கொட்டியாகலை தோட்ட, R.D.A, R.D.D, I.C.R.C, L.C.Ltd., மக்கள்வங்கி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சகலவிதமான உதவிகளையும் முன்னின்று உடனுக்குடன் செய்த அன்பு உள்ளங்களுக்கும், புனித வின்சன் டீ போல சபையினர் மற்றும் பக்தி சபையினருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் 13ஆம் நாள் நினைவுதினமாகிய 02.12.01 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்கான பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மதியபோசனத்திலும் கலந்துகொண்ட அன்பு உள்ளங்கள் அனைத்திற்கும், அன்றையதினம் வழிபாடு நடத்திய புனித வின்சன் டீ போல் சபையினருககும், சகல தேவைகளையும் முன்னின்று செய்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது அன்பு கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: F.R.F. அருள்சோதி
19,குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னாரது பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(95702)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 01 - 06 - 1929



உதிர்வு 09 - 11 - 2001

முத்தமிழ்வித்தகர்

வில்லிசை விற்பன்னர்

### அமரர் கலைமணி சுப்பையா வடிவேலு

*எங்கள் குலதெய்வமே!*

பாசமிகு குடும்பத் தலைவனாய்
பார் புகழும் கலைஞனாய் வாழ்தீரே!
வானகம் சென்றதேனோ வள்ளலே?
மாதமொன்று போனாலென்ன
பல ஆண்டுகள்தான் சென்றாலென்ன
பாசமுள்ள உங்கள் அன்பை
போற்றிடுவோம் பண்பாளரே!

இன்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சப்பாய் ஒழுங்கை,
சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்.

(95707)

## மலசலகூடம் திருத்தம்

குருநகர், டிசெ.9

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் சேதமடைந்த நிலையில் இருக்கும் பெண்கள் மலசலகூடம் யாழ்.மாநகரசபையால் திருத்தப்பட்டு வருகிறது. (ஐ-51)

## நுளம்பு பெருக்கம்

சண்டிலிப்பாய், டிசெ.9

தற்போது பெய்துவரும் பெருமழை, வெள்ளத்தை அடுத்து வலி. தென்மேற்கு மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் மிகவும் அதிகரித்துள்ளது. நுளம்புக் கடியினால் இப்பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் உபத்திரவம் அடைந்து வருவதை அவதானிக்கமுடிகிறது.

நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(ஐ-135)

## சண்டிலிப்பாயில் திருட்டு

நவாலி,டிசெ.9

சண்டிலிப்பாயில் பட்டப்பகல் வேளையில் வீடொன்றின் உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றனர்.

கடந்த 4ஆம் திகதி நண்பகல் வீட்டுக்குள் ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 2 சங்கிலி, 4 காப்பு, மோதிரம், தோடு, கைச்சங்கிலி என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக அப்பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மீது சந்தேகம் கொண்ட வீட்டு உரிமையாளர், அவர்களைத் தந்திரமாகத் தமது வீட்டுக்கு அழைத்து இருவரையும் வீட்டு அறைக்குள் பூட்டி வைத்த பின்னர் மானிப்பாய்ப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து விசாரணைக்காக பொலீஸார் இருவரையும் அழைத்துச் சென்றுள்ளனர். (ஐ-100)

## கலந்துரையாடல்

சண்டிலிப்பாய், டிசெ.9

யாழ்.சுகாதாரத் திணைக்களம் நடத்தும் மனித வள தரவுத்தாள் பூரணப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் விவரங்களை கணனிமயப்படுத்துவதற்காக மனித வள ஆய்வு விவரம் திரட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான படிவங்களை நிரப்புவதில் அலுவலர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதால் அதுபற்றி பூரண விளக்கங்களை அளிப்பதற்காக இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

யாழ்.சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள். (ஐ-135)

## எவரும் வாக்களிக்காத வாக்களிப்பு நிலையம்

தென்மராட்சி,டிசெ.9

கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிக்க வாக்காளர் எவரும் வரவில்லை.

பருத்தித்துறை தேர்தல் தொகுதியின் சுண்டிக்குளம் வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்களிப்பு இடம்பெறவில்லை. இவ் வாக்களிப்பு நிலையத்தில் 16 வாக்காளர்களே வாக்களிக்கத் தகுதி பெற்றபோதிலும் எவரும் வாக்களிக்கவில்லை.

இதேதேர்தல் தொகுதியில் போக்கறுப்பு வாக்களிப்பு நிலையத்தில் 253 வாக்காளர் பதிவுசெய்யப்பட்ட போதிலும் நான்கு வாக்காளர்களே தமது வாக்குகளைச் செலுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)


## புறொயிலர் விற்பனைக்கு

மலிவு விலையில் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

1kg: 140/=

அண்ணா பாம்,
ஸ்ரேசன் றோட்,
இணுவில்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடித்தலத்தில 11 - 09 - 1925



அமலனின் மலர்ப்பதத்தில் 02 - 12 - 1999

### அமரர் தம்பு அப்புத்துரை

*(இளைப்பாறிய P.W.D. உத்தியோகத்தர்)*

திதி:கார்த்திகை அபரபக்கத் தசமி

சிரார்த்த நாள்: இன்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை

அன்புதனைப் பொழிந்தீர்கள்; அறநெறியில் வாழ
வைத்தோய்
அகன்றீர்கள்; இந்நாள் ஆண்டிரண்டு ஆகுதிங்கே
இன்னொருகால் புனர்ஜென்மம் எடுத்துவந்து எங்களது
இதயத்தை மகிழ்விக்க வாருமையான எமதிடத்தே!

*"சரஸ்வதி ஸ்ரோர்ஸ்"*
*நவிண்டில்,*
*கரணவாய் வடக்கு,*
*கரவெட்டி.*

(95694)

என்றும் உங்கள் நினைவில்:
மனைவியார்: அ.சரஸ்வதி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 - 03 - 1945



ஆறுமுகன் தாளடியில் 02 - 12 - 1999

### திருமதி செல்வராணி சிவசுப்பிரமணியம்

திதி: அபரபக்க தசமி (09-12-2001)

*ஆண்டிரண்டு கடந்தாலும் உம் பிரிவு ஆறாதம்மா!*
*அப்பாவும் இருவர் நாமும் ஆருக்கெடுத்து உரைத்திடுவோம்?*
*அபரபக்கக் கார்த்திகைத் தசமிதனில் கார்த்திகேயன்*
*அபயம் அளித்திட அவனடித்தாள் பணிந்தாய்*
*ஆறுபடை வீடுடையான் அழகன்திருக் கழலடி*
*அயராது பற்றியோர்க்கு ஆறுதல்லே றுண்டாமோ?*
*ஆலய வீதி வலம் வந்தால் ஆயிரம் கோடி புண்ணியமென்று*
*அனுதினமும் மாவைப்பதி ஆலயம் சுற்றிவந்தோம்!*
*ஆலமனையை இழந்தோம் அம்மாவையும் இழந்தோம்!*
*அல்லல்படு மெம்நிலைக்கு ஆறுதலருள்வாய் முருகா!*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பளை, தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி:
*வெளிப்புலம்,*
*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(95681)

உங்கள் பிரிவால் துயருறும்:
சு.சிவசுப்பிரமணியம (கணவர்),
சி.தமயந்தி (மகள்),
சி.சிவமேகலை (மகள்),
சி.சிவகுமார் (மருமகன்).

## மரண அறிவித்தல்

திருமதி

### சௌந்தரநாயகி சரவணபவானந்தன்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)*

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோயில் வீதி, நல்லூரை வசிப்பிமாகவும் கொண்ட திருமதி சௌந்தரநாயகி சரவணபவானந்தன் அவர்கள் நேற்றுமுன்தினம்(07-12-2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு சரவணபவானந்தன்(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அச்சுவேலி) அவர்களின் அன்பு மனைவியும், சிவதாசன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சுபத்திரா(மருத்துவபீடம் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - இராசம்மா தம்பதிகளின அன்பு மகளும், பொன்னம்பலம்பிள்ளை (கொழும்பு), முருகவேள், மாணிக்கவாசகர், பேரின்பநாதன்(ஆசிரியர்), சிவகாமசுந்தரி, கந்தவேள், திருஞானசம்பந்தர், கௌரிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09-12-2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/3, கோபால் ஒழுங்கை,*
*கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(95712)

*தகவல்:*
சோ.பேரின்பநாதன்
*(சகோதரன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஜனநாயக விழுமியங்களை பேணுவாரா சந்திரிகா?

தேர்தல் முடிவுகளைப் பொது மக்கள் ஐக்கிய முன்னணி நேர்மையாக ஏற்றுக்கொள்வதாகப் பதவியை விட்டு விலகிச் செல்லும் பிரதமர் ரத்னசறி விக்கிரமநாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

"மக்கள் புதிய அரசை விரும்புகின்றார்கள். அவர்களின் ஜனநாயக உரிமைகளை மீறக்கூடாது. எனவே ஜனநாயக மாண்புகளுக்கு மதிப்பளித்து, புதிய அரசு அமைப்பதற்கு இடங்கொடுத்து எனது பதவியை இராஜினாமாச் செய்கிறேன்" - என்று பெரும் அரசியல் நாகரிகத்தோடு பகிரங்க அறிக்கை விடுத்தபின்னர், பதவியிலிருந்து வெளியேறியிருக்கின்றார் ரத்னசிறி விக்கிரமநாயக்கா. அவரது ராஜினாமாவோடு அவரது அமைச்சரவையும் பதவி விலகியது.

இதே அரசியல் நாகரிகத்தை - ஜனநாயக மாண்பை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கடைப்பிடிக்க வேண்டும் என்றுதான் நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

"1999 டிசெம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி நான். 2005ஆம் ஆண்டு வரை - அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு - நான் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்க மக்கள் எனக்கு ஆணை தந்துள்ளார்கள். அதனை எவருக்கும் கையளிக்க மாட்டேன். எனது அதிகாரத்தை முழுதாகப் பிரயோகிப்பேன். ரணிலும், ஐ.தே.கவினரும் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பதாயின் கட்டுப்பட்டு நடக்கலாம்." - என்ற தொனியில் ஜனாதிபதி குமாரதுங்க நடவடிக்கை எடுப்பாராயின் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும்; அரசமைப்பு நெருக்கடி உருவாகும்; இறுதியில் அது சந்திரிகாவின் அதிகார நிலைக்கே உலைவைப்பதாகப் போய் முடிந்தாலும் முடிந்துவிடும்.

1999 டிசெம்பரில் சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த மக்கள்தான் 2000 ஒக்ரோபரில் அவரது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை மீண்டும் ஆட்சிப் பீடமேற்றினார்கள். அவர்கள்தான் சரியாக ஒரு வருடத்தில் அதே அரசைத் தூக்கி வீசியிருக்கின்றார்கள்.

ஆறு வருட ஆட்சிக்குத் தாங்கள் தெரிவுசெய்த அரசையே அடுத்த ஒருவருடத்துக்குள் தூக்கி எறிந்ததன்மூலம் தங்களது விருப்பம் இந்த ஒருவருட காலத்துக்குள் மாறிவிட்டது என்பதைப் பொதுமக்கள் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

தனது அரசு, தனது அரசு என்று ஜனாதிபதி குமாரதுங்க குறிப்பிட்டு அவர் வழிநடத்திய அரசின்மீது முழு நம்பிக்கையீனத்தை மக்கள் வெளிப்படுத்தியிருக்கும்போது -

அந்தத் தோல்விக்குப் பிரதமர் பதவியில் தன்னால் அமர்த்தப்பட்டு - தனது பொம்மையாகச் செயற்பட்ட - ரத்னசிறி விக்கிரமநாயக்காவை பலிக்கடாவாக்கிவிட்டு, தனக்கு ஏதும் தோல்வி ஏற்படாதது போலவும் -

மக்களால் இந்தத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டது தனது அரசு இல்லை என்பதுபோலவும் -

தனது ஆட்சி அதிகாரத்துக்கு இந்தத் தேர்தல் முடிவுகளால் இழுக்கு ஏதும் ஏற்படவில்லை என்பது போலவும் -

ஜனாதிபதி குமாரதுங்க நடந்துகொள்வாராயின் அது மக்களின் காதில் பூச்சுற்றும் வேலையாக அமையுமே தவிர, வேறில்லை.

தனது அரசுக்கு ஏற்பட்ட இத்துணை பெரிய தோல்வியைச் சந்தித்த பின்னரும் - தனது ஜனாதிபதி அதிகாரத்துக்குப் பங்கம் வரவில்லை என்ற தொனியோடு நடந்து, நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்படுவதற்கு சந்திரிகா இடமளிக்கக் கூடாது.

1994இல் தான் பிரதமராகப் பதவியேற்றபோது, ஐ.தே.கட்சியைச் சேர்ந்த அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பேணிய அரசியல் நாகரிகத்தை - நேர்மையை - மக்கள் தீர்ப்புக்கு அவர் அளித்த கௌரவத்தை - ஜனாதிபதி குமாரதுங்கவும் கொடுப்பார்; அதன்மூலம் ஜனநாயக விழுமியங்களைப் பேணுவார் என எதிர்பார்ப்போமாக!

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி
# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 'நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும்' என்ற பாடநெறியைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்டை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த நேர்முகப் பரீட்சையில் ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்கள் கலந்துகொள்ளமுடியும்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் திரட்டுப் புள்ளியாக 245இற்குமேல் பெற்றுள்ளவர்களுமே இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

எஸ்.குகந்தினி (கைதடி), எஸ்நிமலநேசன் (யாழ்ப்பாணம்), ஜி.தர்மினி (வல்வெட்டித்துறை), ரி.இரதிவதனி (ஏழாலை), எஸ்.லாவன்யா (ஆவரங்கால்), ரி.தர்ஷினி (பண்டத்தரிப்பு), எஸ்.யோகமலர் (வல்வெட்டித்துறை), எம்.நிலவன் (உடுப்பிட்டி).

எஸ்.கார்த்திகா (அச்சுவேலி), ரி.ரூபரஞ்சன் (உடுப்பிட்டி), எஸ்.காயத்திரி (சுன்னாகம்), ரி.விதுரன் (நீர்வேலி), கே.தயாளினி (கந்தர்மடம்), ஆர்.றணேசன் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவதர்சினி (சங்கானை), எஸ்.சுதர்சினி (திருநெல்வேலி), எஸ்.அகிலா (அராலி), எஸ்.கவிதா (கொழும்புத்துறை), ஆர்.நிஜிலா (நாரந்தனை), பி.தேன்மொழி (கொட்டடி), ஆர்.தர்மிளா (உடுவில்) ஆகியோரே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ம-6)

## நாட்டு நடப்பு

**ஆனைத் தளபதிக்கு மௌலி**

*ஆனைத் தளபதி தேர்தல் வெல்ல அம்மணியின் கட்சி தோற்க*
*தானைத் தலைவனாம் பிரதமரும் தளர்ந்து தன் பதவி நீங்க*
*சேனைகள் விட்டகலச் செழிப்புடன் கதிரோன் மெச்ச*
*ஆனைத் தளபதியைக் கட்டிவந்து அம்மணி புனைந்தாள் மௌலி.*

*- விகடகவி.*

## பல்கலை. செல்லவில்லை என்ற கவலையைவிட்டு
# வேறு கல்வி நிறுவனங்களில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம்,டிசெ.9

பல்கலைக்கழகக் கல்விக்கு மாற்றீடாக பட்டம்பெறக்கூடிய அளவுக்கு தற்சமயம் கல்வித்துறையில் மாற்று வசதிகள் ஏற்பட்டுள்ளன. எனவே பல்கலைக்கழகம் செல்லவில்லையே என்ற கவலையைவிட்டுக் கல்வி நிறுவனங்களில் இணைந்து பட்டப்படிப்பை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

- இப்படிக் கூறினார் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகப் பீடாதிபதி பேராசிரியர் சு.மோகனதாஸ்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவசுப்பிரமணியத்தின் நினைவுப் பேருரையின் போதே அவர் இப்படிக் கூறினார்.

கல்லூரி அதிபர் எஸ்.சிவாஜி தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் ஆசிரியர் ஆறு.திருமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மோகனதாஸ் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மூலம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வெட்டுப்புள்ளி அடிப்படையில் தெரிவாவதற்கு மேலதிகமாக, யாழ்.பல்கலைக்கழகத்தில் சித்த வைத்தியம், நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் போன்ற துறைகளிலும் பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்.

மருத்துவம் போன்ற ஓரிரு துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளில் தலைநகர் கொழும்பிலும் அதை அண்டிய இடங்களிலும் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், கல்வி நிலையங்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடைய பட்டப்படிப்புக் கல்வியைப் போதிக்கின்றன. அவைக்குரிய பரீட்சைகளும் இங்கேயே நடைபெறுகின்றன. உதாரணமாக கொழும்புப் பல்கலைக்கழகம் நடத்தும் BIT, மன்செஸ்ரர் பல்கலைக்கழகம் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள இன்போமற்றிக் நிறுவனத்தினால் B.Sc. போன்ற பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இவை தவிர உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளினால் வழங்கப்படும் டிப்ளோமா கற்கை நெறிகளைக் குறைவாக மதிப்பிடக்கூடாது. ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்காமல் ஜி.சீ.ஈ. சாதாரணக் கல்வியுடன் பட்டப்படிப்பினை திறந்த பல்கலைக்கழகம் மூலமோ, அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலமோ பெறமுடியும்.

ஜி.சீ.ஈ. உயர்தரம் மூன்று பாடங்களாகிவிட்டது. 2002ஆம் ஆண்டிலிருந்து, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மாதம் நடைபெற்று அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் பல்கலைக்கழகம் புகுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. ஒரு பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவன் இன்னொரு பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற விசேட கற்கை நெறியைக் கற்பதற்காக இந்த இரண்டாவது பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற்று ஓர் அரையாண்டுக் கல்வியையோ அல்லது இரண்டு அரையாண்டுக் கல்வியையோ கற்க வசதி செய்யப்படும்.

தொலைக்கல்வி கற்கை நெறிகளை இனி தபால்மூலம் கற்பதற்குப் பதிலாக கணனி இணையம் மூலம் வீட்டில் இருந்தபடியே கற்றுக்கொள்ளலாம். கணனி இணையம் மூலம் பாடங்களைத் தயார் செய்வது மாத்திரமன்றி பரீட்சைக்குத் தோற்றவும், நேர்முகப் பரீட்சைக்குப் பங்குபற்றவும் வெளிநாட்டில் இருக்கும் வேலை வசதிகளைப் பெறவும் முடியும் - என்று அவர் கூறினார்.

கல்விமானும், சமூகத் தொண்டனுமாகிய அமரர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவுகூர்ந்த பேராசிரியர் மோகனதாஸ்:-

சிவசுப்பிரமணியம் அவர்கள், மாணவர் பரம்பரையைக் கொண்ட பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தார். அத்துடன் கலைப்பிரிவுக்கும் விஞ்ஞானப் பிரிவுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுவதற்கு வசதியாக இவ்விரு துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவராகவும் அமரர் சிவசுப்பிரமணியம் கல்வி போதித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூலம் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிக எண்ணிக்கையில் மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமை அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களையே சாரும். அமரர் பாடசாலையில் மாணவருக்கு நல்ல கல்வியைப் புகட்டியது போன்று நல்ல சமூகத்தொண்டு செய்து பாடசாலையையும், நாட்டையும் முன்னேற்றிவைத்தார். அவருடைய நற்பணி என்றும் நினைவுகூரவேண்டும். அப்பணியைச் செய்து வரும் அவருடைய பிள்ளைகளையும், குறிப்பாக வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா அவர்களையும் பாடசாலைச் சமூகத்தையும் பாராட்ட வேண்டும் - என்றார் அவர். (ம-7)

# விரிவுரையாளர் தாக்கப்பட்டதற்கு சமூகவியல் சமூகம் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

ஜனநாயகத்தின் பெயரில் அதிகரித்துவரும் அடாவடித்தனங்களின் ஒரு கட்டமாக, எங்கள் அன்புக்குரிய சமூகவியல்துறை விரிவுரையாளரும் அவர் சகோதரரும் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளோம். சம்பவத்துக்குக் காரணமான ஆயுதக்கும்பல் இனங்காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். இவ்வாறான காடைத்தனங்களுக்கு எதிராக மக்கள் எழுச்சிகொள்ள வேண்டும்.

தேர்தல் நாளன்று மோட்டார் சைக்கிளில் சென்ற யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளர் ஏ.ஈ.ரிச்சாட், அவரது சகோதரர் ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் காவலர் நாமே என்றபடி மனித உரிமைகளைத் தின்னும் வன்முறையாளர்களால் மனித நாகரிகமே தலை குனிகின்றது. இவ்வாறான அவலங்களைத் தட்டிக்கேட்கும் சமூகமே இன்றைய எம் முதல் தேவை. இவ்வாறான நிகழ்வுகளைத் தனித்தனிச் சம்பவங்களாக நோக்காமல் எம் சமூகத்தைப் பிடித்துள்ள நோய்நிலையின் உக்கிர வெளிப்பாடுகளாக உணர்ந்துகொள்ள வேண்டும். விழிப்புணர்வு கொண்ட சமூகத்தினால மட்டுமே இவ்வாறான அடாவடித்தனங்கள் தொடராமல் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் தேர்தல் தினத்தன்று தாக்கப்பட்டதைக் கண்டித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

### கொடிகாமம் ஆசிரியருக்கு!

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியிலுள்ள கிறிஸரல் கல்வி நிலையத்திற்குத் தவறாது சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார். (க)

### நாளை

**கார்த்திகை 25**
**திங்கட்கிழமை**
**திதி : தசமி**
**முற்பகல் 9.16 வரை.**
**நட்சத்திரம்: அத்தம்**
**முற்பகல் 7.56 வரை.**
**சுபநேரம் : 12.19 - [illegible]**
**ராகுகாலம் : 7.49 - [illegible]**
(பழைய நேரப்படி)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

சாரணிய வழிகாட்டுநர்களுக்கென (ஆசிரியர்கள்) எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த முதலாம் தரப் பயிற்சி வகுப்புகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் -

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பெண் சாரணிய மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (க-7)

### உதயவாக்கு

மற்றவர்களை விரலை நீட்டிக் குற்றஞ்சாட்டும்போது உங்களது மற்றைய மூன்று விரல் [illegible] உங்களையே சுட்டிக்காட்டுவதை உணருங்கள்.

## யாழ். மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள் ஒரே பார்வையில்!

யாழ்ப்பாணம்,டிசெ.9

நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட 11 கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையும் வாக்கு வீதமும் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| ✪ த.வி.கூ. | 102,324 | 54.83% |
| ✪ ஈ.பி.டி.பி. | 57,208 | 30.45% |
| ✪ ஐ.தே.க. | 16,245 | 8.70% |
| ✪ ஸ்ரீ.மு.கா. | 3,364 | 1.80% |
| ✪ சுயேட்சைக்குழு | 2,677 | 1.43% |
| ✪ ஜனநாயக இடதுசாரி முன்னணி | 2054 | 1.10% |
| ✪ புளொட் | 1454 | 0.77% |
| ✪ ஐக்கிய சோசலிசக் கட்சி | 410 | 0.21% |
| ✪ புதிய இடதுசாரி முன்னணி | 407 | 0.21% |
| ✪ ஜே.வி.பி. | 242 | 0.12% |
| ✪ சிஹல உறுமய | 213 | 0.11% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (Broilers), கல் பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (95451)

வேப்பமரம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 95-A, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (95682)

நல்ல நிலையிலுள்ள PEGEOT CAR [6 SRI 0120] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.குலசிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு. (95676)

ORIGINAL JAPAN SONY, NATIONAL T.V., VIDEO DECK, AUDEO SET, BOX என்பன உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (95718)

இரண்டு வயது நிரம்பிய கறுப்பு நிறமுள்ள பொமனேரியன் நாய் (ஆண்) விற்பனைக்கு உண்டு. R.பேபி, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (95718)

40 நாள் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டியும், (மண்ணிறம், வெள்ளை, கறுப்பு) லவ்பேட்ஸ் குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சீ.ஞானசேகரம் (ஆண்டவர்), சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. (95721)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் சேவல் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக் கோட்டைச் சந்தி. T.P.No. 3529, 2867. (95579)

இறைச்சிக்கோழிகள் புறொயிலர், கல்பேட் என்பன சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (95631)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவகுமார், கட்டப்பிராய்ச்சந்தி, கல்வியங்காடு. (95701)

## குஞ்சுகள் விநியோகம்

அச்சுவேலிப் பண்ணையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு நாள் குஞ்சுகள் 13.12.2001 விநியோகிக்கப்படவுள்ளன. சேவல் 11/=, பேடு 41/=, புறொயிலர் 43/=. தேவையானோர் முற்பணத்தைச் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும். 123, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (95717)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 25வயதுடைய 28கிரக பாவம் உள்ள பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்ககின்றனர். குடும்ப விவரம், ஜாதகக் குறிப்பு என்பனவற்றுடன் தொடர்பு: விள. இல.1413, மே/பா உதயன். (95709)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய செவ்வாய் தோஷமற்ற அரச உத்தியோகத்தர் மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. குறிப்பு உள்ளடலங்கலாகத் தொடர்புகொள்ளவும். விள.இல. 1414, மே/பா உதயன். (95710)

## தவறிவிட்டது

தவராசா செல்வநாயகியின் தேசிய அ.அட்டை (இல.497340576V), விசேட அ.அட்டை (இல.0907007768), தேவதயாளன் சிவசக்தியின் தேசிய அ. அட்டை (இல.718094518V), விசேட அ. அட்டை (இல.093006086) என்பவை சிறீதர் தியேட்டருக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புத்தூர் மேற்கு, புத்தூரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (95698)

## பரிகாரங்கள்

கிரகதோஷங்களால் மணமாகாத ஆண், பெண்களுக்கும், வியாபார விருத்தி தடை, கணிதமூலம் வியாபாரப் பெயர், சரியான தொழில், ஜாதக பலன், திருமணப் பொருத்தம் மற்றும் பல்லின, மத ஆண், பெண்களை மணமக்களாக அடையவும். தொடர்பு: ராகவேந்திர ஜோதிடம், நல்லூர்.(95688)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், ஆலங்குளாயில் அமைந்த பிரயோசனத்துடன் கூடிய புதிய வீடும் காணியும் (8பரப்பு), வயல் (7 பரப்பு) விற்பனைக்குண்டு. தொடர்பு: த.இராஜகோபால், "கோகுலம்" சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (95678)

## முக்கிய அறிவித்தல்

### மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை

12-12-2001 புதன்கிழமை ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்கு சமுகம் தரவும். வருபோது மாணவர்கள் தங்களிடமுள்ள பாடப்புத்தகங்களைக் கொண்டுவரவும். தேர்ச்சி அறிக்கையும் அடுத்த வகுப்புக்குரிய புத்தகங்களும் வழங்கப்படும்.

(95726) - அதிபர்.

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்.

# துயர் பகிர்கின்றோம்

சுன்னாகம் பல நோ.கூ.ச. முன்னாள் பிரதம லிகிதரும், செயலாளருமாகிய,

## தம்பர் கனகரத்தினம்

அவர்கள்

06.12.2001இல் காலமாகிய செய்தி அறிந்து கவலையடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்,
07.12.2001. (C/19681)

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

# 36ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 - 06 - 1908



உதிர்வு 04 - 11 - 2001

## அமரர் நமசிவாயம் சரவணமுத்து

திதி: ரோகினி

*அன்பை ஊட்டி அறிவை வளர்த்து*
*அவனிபோற்ற எமை வாழவைத்த*
*அன்புத்தந்தையே!*
*ஆறாது எம்துயரம்!!*
*உங்கள் ஆத்மா சாந்திய பெற இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

நிரந்தரமுகவரி:-
*டச்சு றோட், தெல்லிப்பழை.*
தற்காலிகமுகவரி:
*வட்டு.தென்மேற்கு,*
*வட்டுக்கோட்டை.* (95713)

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## யாழ்.மத்திய கல்லூரி ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.9

2002ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றும் மாணவர்களில் இதுவரை விண்ணப்பிக்காத யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் கல்லூரிக்கு வருகைதந்து விண்ணப்பிக்குமாறு கல்லூரி அதிபர் க.இராஜதுரை தெரிவித்தார். (ஐ-8)

## தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.9

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையத்தின் கீழ் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் வாக்களிப்புத் தினத்தன்று கண்காணிப்புப்பணியில் ஈடுபட்ட கணகாணிப்பாளர்களுக்கு நாளை திங்கட்கிழமை அவர்களது பணிக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புப்பணியில் ஈடுபட்ட தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ். டேவிட் வீதியில் உள்ள அலுவலகத்தில் அவர்களுக்கான கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளுமாறும் -

அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அதன்பின் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா என்றும் தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையத்தின் அமைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## Computer Operator தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள உளநலத்துறை சார்ந்த இணையத்தளம் ஒன்றில் பணியாற்றக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவரும், அதேதுறையில் தெல்லிப்பழையில் உள்ள அமைப்பு ஒன்றில் Computer Operator ஆகப் பணியாற்றக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவரும் ஒப்பந்த அடிப்படையில் தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:- விள.இல.1415,
மே/பா உதயன்,
(95728) யாழ்ப்பாணம்.

# அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்

## நன்றி அறிவித்தல்

எங்கள் கட்சிக்கும், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கும் வாக்களித்த மக்களுக்கு எங்கள் உள்ளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எங்களுக்கு விருப்பு வாக்கினை அளித்த தூயதமிழ் உள்ளங்களுக்கும், எமக்கு ஆதரவாகச் செயற்பட்ட கட்சித் தொண்டர்களுக்கும், பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும், சமய நிறுவனங்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்சியின் தனித்துவத்தைக் காத்துத் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையைப் பேணி உங்களுக்காகத் தொடர்ந்து உழைத்து வருவோம்.

*இப்படிக்கு:*
அ.விநாயகமூர்த்தி,
சி.வி.கே.சிவஞானம்,
கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்.
(95530)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 29 - 09 - 1924



மறைவு 04 - 11 - 2001

## அமரர் தம்பிமுத்து சீதாலட்சுமி

(ஆசிரியை)

காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (9.12.2001) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடைபெறும். அதனைத்தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

த.நந்தகுமார்,
*நம்பித்தாவத்தை, பொலிகண்டி.* (95731)

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## தினகரிப்பிள்ளை குமாரசாமி

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், மில் ஒழுங்கை, மீசாலை வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகக்கொண்டவரும் தற்போது கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமாகிய தினகரிப்பிள்ளை குமாரசாமி அவர்கள் நேற்று (08.12.2001) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் நாகமமா, முத்துக்குமாரு, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், சிவபாதம் (சுவிஸ்), சற்குணராஜா (சுவிஸ்), வசந்தேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும் பாக்கியதேவி (சுவிஸ்), கௌரிஇந்திராணி (சுவிஸ்), பாலச்சந்திரன் (செயலாளர், பச்சிலைப்பள்ளி - பிரதேசசபை) ஆகியோரின் மாமனாரும், சந்திரசேகரம், முத்தம்மா ஆகியோரின் தாய் மாமனாரும், அன்னலட்சுமியின் மைத்துனரும் சியாமினி, தர்சன், தனுசன், சியந்தன், காலஞ்சென்ற நிதுஷான் மற்றும் டிலக்சி, சகான், சர்விகா, சர்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (8.12.2001) சனிக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிகமுகவரி:-
*கோண்டாவில் புகையிரத நிலையத்தடி,*
*அரசடி பிள்ளையார் கோவில் முன்பாக,*
*ஞானவைரவர் கோவில் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (95716)

தகவல்:-
கு.ந.பாலச்சந்திரன்
(மருமகன் - செயலாளர்,
பச்சிலைப்பள்ளி
பிரதேசசபை, பளை)

## திருமதி பரநிருபசிங்கம் செல்லம்மா

(தம்பிப்பிள்ளை)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 27, சீனியாலேன யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரநிருபசிங்கம் செல்லம்மா 6.12.2001 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பரநிருபசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கோபால பிள்ளை மற்றும் தனபாலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் வன்னியசிங்கம் (ஜேர்மனி) தற்பரானந்தம் (ஜேர்மனி) பூலோக இந்திரன் (கனடா), ஜெகசோதி (ஜேர்மனி), கங்காதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் கனகமணி (வவுனியா), கிருஷ்ணவேணி (ஜேர்மனி), ரதிதேவி (கனடா), லலிதாதேவி (வவுனியா), பாலகுமாரி (ஜேர்மனி), யோகம்மா (கனடா), விஜயகுமார் (ஜேர்மனி), மோகனராஜா (நோர்வே), திருமதி புஸ்பா வரதராஜா (ஆசிரியை - யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), தாமோதரம் பிள்ளை குணரஞ்சினி (ஆசிரியை - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27, சீனியர் லேன்,*
*(துட்டாதெருச் சந்தி அருகில்),*
*யாழ்ப்பாணம்.* (95720)

தகவல்:-
தனபாலசிங்கம் (மகன்),
குணரஞ்சினி (மருமகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
## பாராட்டுதலும் நன்றி கூறுதலும்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எமது கட்சியின் அமைப்பாளர்

## திரு.ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை

(வெள்ளிமலை)

அவர்களைப் பாராட்டுவதோடு, அவருக்கு வாக்களித்த தமிழ் நெஞ்சங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
**வாலிப முன்னணி.**

(95531)

## WORLD HUMAN RIGHTS DAY

A Presentation of **RAINER FRAUENFELD** Human Rights Award and Reading of Award winning Article will be held at the ***Shanthiham Kuddil***
on 10th December 2001 at 4.00 p.m.
*(English Translation will be issued at the Venue)*

***15, Kachcheri Nallur Road,***
***Chundikuli,***
***Jaffna.***

(C/19680)

## நாகம்ஸ் சுன்னாகம்

பிரசாந்த், ஷாலினி,
மணிவண்ணன் நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00,3.00
(புதிய நேரம்)

(95706)

## நிரஞ்சனாஸ்
சங்கானை

ரஜனி, பிரபு, கௌதமி நடித்த
**குருசிஷ்யன்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C-19574)

## ராஜா யாழ்ப்பாணம்

4 ஆவது வாரமாக
கமல், மனீஷா
*மற்றும் பலர் நடித்த*
**ஆளவந்தான்**
தினசரி:- 10.30,2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்)

(C/19573)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் தரம் 1இற்கு பதவி உயர்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்களாகிய,

01. திரு.கே.சின்னராசா
02. திரு.என்.பத்மசோதி
03. திரு.என்.யோகேந்திரராஜா
04 திரு.எஸ்.கணேசு
05. திருமதி எஸ்.அழகேந்திரராஜா
06. திரு.வி.கே.அருந்தவநாதன்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இவர்களின் சேவை கூட்டுறவின் வளர்ச்சிக்கு என்றென்றும் வழிகாட்டுவதாக அமைய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

*சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,*
*சுன்னாகம்.*

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

(C-19682)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் கார்த்திகைத் திங்கள் 24ஆம் நாள் இன்று (09-12-2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.42 மணிமுதல் 2.13 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது
கனிஷ்ட புத்திரன்
**யோகேஸ்வரன்**
அவர்களுக்கும்



எமது
கனிஷ்ட புத்திரி
**தெய்வநிதி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்.வண்ணை ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்ப ர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அழைப்பிதழ் கிடைக்காதோர் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

***இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்***

திருமதி வே.இராசையா
திரு.திருமதி இ.இராசரத்தினம்
குடும்பத்தினர்
(மண்கும்பான் மேற்கு),
இல.58A, பிரப்பங்குள வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


திருமதி இ.நல்லையா
குடும்பத்தினர்
(மண்டைதீவு - 06)
இல.45, புது வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(95733)

## முதலாவது வருட நினைவலைகள்

தோற்றம்
10 - 08 - 1915



மறைவு
20 - 12 - 2000

## அமரர் கனகு சின்னத்தம்பி (P.K.S)

(பிரபல புகையிலை வியாபாரியும்,
இப்பாகமுவா தாசன் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும்)
திதி: 09-12-2001

**எமையெல்லாம் அன்புடனும் பண்புடனும்**
**நல்வழி நடத்திய அன்புத் தெய்வமே!**
**நீங்கள் இறைவனடி சென்று ஆண்டு ஒன்று ஆனதுவே!**
**இன்னும் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்**
**உங்கள் இன்ப முகம் எமது நெஞ்சத்தில் நிறைந்து**
**நிலையாக என்றும் நிறைந்திருக்கும்!**

உங்களது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
கைதடி கயிற்றசிட்டிக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*கைதடி மத்தி,*
*குமர நகர்.*

(95732)



## இதயம் கலந்த நன்றிகள்!



**அன்பார்ந்த இனிய தமிழ் மக்களே!**

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நீங்கள் ஒன்றுதிரண்டு தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஜனநாயக வழியிலே வலுக் கொடுக்கத் தமிழர் கூட்டமைப்பாம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அமோக ஆதரவளித்தமைக்கு முதற்கண் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**யாழ்.குடாநாடு முழுவதும் பரந்து வாழும் என் இனிய தமிழ் மக்களே!**

நீங்கள் எனக்களித்த அமோகமான பெரும் ஆதரவுக்கு என் இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தென்மராட்சி வாழ் மக்களே!**

இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் சிரமம் பாராது, எமது மண்ணின் பெருமையைப் பகிரங்கமாகப் பறைசாற்றி எனக்களித்த ஆதரவுக்கு என் பணிவான நன்றிகள். தேர்தல் தினத்தன்று நீங்கள் அடைந்த போக்குவரத்துக் கஷ்டங்களை நான் அறிவேன். அதற்காக மனவேதனைப்படுகின்றேன். உங்கள் மனத்திடத்துக்கும் நீங்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கும் விசுவாசமாக இருப்பேன்!



**தீவக வாழ் மக்களே!**

தமிழர் கூட்டமைப்புக்கு நீங்கள் துணிகரமாக அளித்த அமோக ஆதரவுக்கு எமது மனமுவந்த நன்றிகள். உங்கள் ***மண்ணின் மைந்தன் பேரம்பலம்*** அவர்களை என்றும் நன்றியுடன் நினைவுகூருவோம்.

**மீண்டும் என் மனமுவர்ந்த நன்றிகள்**
**உங்களுக்கு உரித்தாகட்டும்!**

என்று அன்புடன்
**நடராஜா இரவிராஜ்**
(சட்டத்தரணி, யாழ்.மாநகர முதல்வர்.)

(95532)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர்
**திரு. கு.ந.பாலச்சந்திரன்**
அவர்களின் அன்பு மாமனார்
## அமரர் தினகரிப்பிள்ளை குமாரசாமி
(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்)

அவர்கள் 08.12.2001 இல் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்துவதோடு அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

*தலைவர், உறுப்பினர்கள்,*
*உத்தியோகத்தர்கள்,*
*பணியாளர்கள்,*
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(95738)

## மரண அறிவித்தல்

## திருமதி தாட்சாயணி சண்முகம்

மாப்பாணவூரி, காரைநகரைச் சேர்ந்த திருமதி தாட்சாயணி சண்முகம் நேற்றுமுன்தினம் (7.12.2001) வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் சுந்தரேசன், நிர்மலா, வசந்தராணி, காந்திமதி, உமாதேவி, செல்வராணி, அமுதராணி, இராசகோபாலன், மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தி, மகாலிங்கம், அமிர்தகுணநாதன், உதயகுமார், நமசிவாயம்பிள்ளை, சிவானந்தன், விஜயராணி சிறீசங்கர் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2001) திங்கட்கிழமை நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*139, 3ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.வசந்தராணி
(மகள்)

(C/19686)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பது நிரூபணம்!

## மட்டக்களப்பு மாவட்ட புதிய எம்.பி.தங்கவடிவேல் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.9

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை வடக்கு - கிழக்கில் நடந்து முடிந்துள்ள தேர்தல் முடிவுகள் சர்வ தேச சமூகத்துக்கும், தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் தெளிவுபடுத் தியுள்ளது.

இவ்வாறு தமிழர் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.தங்கவடிவேல் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல் முடிவுகளை அனைவரும் ஏற்று இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ரணில் தமிழீழத்தைப் புலிகளின் தலைவர் பிர பாகரனிடம் ஒப்படைத்துவிடுவார், புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட் சிக்கும் இடையில் இரகசிய ஒப் பந்தம் உள்ளது என்றெல்லாம் - சந் திரிகா அரசு பொய்ப் பிரசாரம் செய்து வந்தபோதிலும் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே சிங்கள மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

இதனை உணர்ந்து ரணில் விக் கிரமசிங்க இனப்பிரச்சினை விடயத் தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும். யுத்தத்தை நிறுத்தி, புலிகளு டன் பேச்சுக்களை நடத்த வேண் டும்.

உரிய நடவடிக்கை எடுக்க அவர் தவறும் பட்சத்தில் இந்த நாடு இரண் டாகப் பிளவுபடுவதை தவிர வேறு வழியே இல்லை - என்று அவர் தெரி வித்தார். (ஐ-6)

## இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.9

சுழிபுரம் சத்திய காட்டுச் சந் தைக்கு அருகில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்ப வத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களயும் விளக்கமறியிலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

மானிப்பாய் பொலீஸாரால் மல் லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட பால சுப்பிரமணியம் ரஞ்சித்குமார் (பண் டத்தரிப்பு), சோமசுந்தரம் பரலோ கசிங்கம்(வெள்ளவத்தை) ஆகிய இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கடந்த ஐந்தாம் திகதி இடம் பெற்ற பொதுத் தேர்தலில் வாக்க ளிக்க வாகனத்தில் சென்ற பொது மக்கள் மீது இவர்கள் கிரனேட் வீசி யதாகவும் -

இதனையடுத்து இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரிடம் இருந்தும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலீஸார் தெரி வித்தனர். (ஐ-6)

## யாழ்.புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.சிவமகாராசா - 11,296, கா.சந்திர ராசா - 10,514, வி.ஜி.தங்கவேல் - 5,869.

### ஈ.பி.டி.பி.

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் - 3,283, க. மணிபல்லவராஜன் - 2786, கே.வி. குகேந்திரன் - 2,514, ந.திரிலோகநா தன் - 1,434, க.பாலநடராஜஐயர் - 1286, து.பாஸ்கரன் - 963, மகேஸ் வரி வேலாயுதம் - 861, ப.சீவரட்ணம் - 601, சி.தவராசா - 542, எஸ்.சிவ தாசன் - 380.

### ஐ.தே.க.

மு.சிவபாலன் - 3,452, எ.அருணா சலம் - 2326, பொ.சிவபாதம் - 2262, ல.திலகநாயகம்போல் - 1,847, எம். செல்வராசா - 1,632, எம்.கனகசுந் தரம் - 1,581, சோ.ஜெயேந்திரா - 1201, ந.இராஜசூரியர் - 1,170, சி.கண பதிப்பிள்ளை - 1,115, செ.இராஜரட் ணம் - 940, கு.குலேந்திரராஜா - 619, (ம-10-8)

## நாதஸ்வர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைபவத்தின்போது சிங்கள வாத்தி யக் கலைஞர்களுடன் இணைந்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர் களும் இசை மழை பொழியவுள் ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தி. மகேஸ்வரன் இதற்கான ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளார்.

குடாநாட்டைச் சேர்ந்த பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இதற கென கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## பிரதமராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் - அவர்களின் பதவிப் பொறுப்புகள் இன்று இறுதி செய் யப்படும் என்றும் - கட்சி வட்டாரங் கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரி வித்தன.

ரணில் விக்கிரமசிங்க இன்று பத வியேற்றதும் தேசிய அரசு அமைக்க வருமாறு பொதுமக்கள் ஐக்கிய முன் னணிக்கு அழைப்பு விடுப்பார் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசயம் அமைச்சரவையை அமைப்பற்கு முன்பாக அது குறித்து சகல கட்சிகளுடன் அவர் பேச்சு நடத்த இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-ம-6)

## தலிபானின் தலைவர் ஓமர் கந்தகார் அருகே காவலில்?

லண்டன்,டிசெ.9

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர் பிடிபட்டு கந்தகார் அருகே காவலில் வைக்கப்பட்டுள் ளதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலிபான் படையினருடன் சுமுக உறவைப் பேணி வந்த காலித் பஸ் தூண் என்பவரின் தலைமையிலான படையின் காவலில் தற்போது ஓமர் உள்ளதாகவும் - அவர் நேசமான சூழ்நிலையில் வைக்கப்பட்டிருப்பதா கவும் - கந்தகார் தளபதி குல் ஆஷாத் ஷெர்ஷாயி தெரிவித்தார். எதிர்வரும் 22ஆம் திகதி பதவியேற் கவுள்ள இடைக்கால அரசிடம் ஓமரை ஒப்படைக்கும்படி, பழங்குடி சபைக் கூட்டத்தில் தனது குழு கோர உள் ளதாகவும் ஷெர்ஷாயி தெரிவித்தார்.

பஸ்தூண் இனக்குழுப்படையி னால், ஓமர் பிடித்து வைக்கப்பட்டுள் ளதாக பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனமான 'சனல் 4' தெரிவித் துள்ளது.

ஆயினும் பிரிட்டிஷ் ஊடகங் களின் ஓமர் பற்றிய செய்திகள் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை. தலிபான் தலைவர் ஓமரின் புகைப் படமோ, அங்க அடையாளங்களோ இதுவரை வெளி உலகில் எவருக் கும் தெரியாதவை என்பது குறிப்பி டத்தக்கது. (ஓ-9)

## அரச உடைமைகள் விற்கப்படுவதாக மகேஸ்வரன் நேற்று முறைப்பாடு

அரச உடைமைகளைப் பொது மக்களுக்கு விலைக்கு விற்பதில் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டி ருப்பதாகத் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக் கும் தி.மகேஸ்வரன் வடக்குப் பிர திப் பொலீஸ்மா அதிபரிடமும், யாழ். பொலீஸ் அத்தியட்சகரிடமும் முறை யிட்டிருக்கிறார்.

அரசாங்க உடைமைகளான பல பொருள்கள் யாழ்ப்பாணத்தின் சில இடங்களிலும், தீவுப் பகுதிகளிலும் பொதுமக்களுக்கு விற்பனை செய் யப்படுவதாகவும் -

அப்பொருள்கள் அரச நிதி மூல மும், உலக நாடுகள் வழங்கிய நிதி மூலமும் யாழ்ப்பாண மக்களுக்கா கக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் என்றும் -

அத்தகைய பொருள்களை வாங் குவதும் விற்பனை செய்வதும் சட்ட விரோதமானது மட்டுமன்றி தண்ட னைக்குரிய குற்றமுமாகும் என்று மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

## நேற்றிரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி மாவட்டத்தில் மட்டும் நேற்றுப் பிற்பகல் 3 மணிமுதல் ஊர டங்குச் சட்டம் அமுல் செய்யப்பட் டது.

நாட்டில் அரசியல் ஸ்திரநிலை ஏற்படும்வரை அடுத்த சில தினங் களுக்கு இரவு நேர ஊரடங்கு தொடர்ந்து அமுல் செய்யப்படலாம் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரி வித்தன. (ஐ-6)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுமுழுதாக விட்டுவிடவேண்டும் என்று ஐ.தே.க. தரப்பில் வலியுறுத் தப்பட்டுவருகிறது.

நேற்றைய சந்திப்பின் இறுதியில் இது விடயத்தில் இரு தலைவர்களும் ஓர் இணக்கத்துக்கு வந்ததாகவும் -

அதனையடுத்தே புதிய பிரதமர் பதவியேற்பது குறித்த உத்தியோக பூர்வ அறிவிப்பு ஜனாதிபதி செயல கத்தில் இருந்து வெளியிடப்பட்ட தாகவும் -

தெரியவந்தது. (ஐ-ம-6)


# ஐடியல் அக்கடமி

சண்டிலிப்பாய். காரைநகர்.

தரம் 6 முதல் O/L வரை

**கல்வியாண்டு 2002**

**எமது ஆசிரியர் குழு**

| பாடம் | சண்டிலிப்பாய் | காரைநகர் |
|---|---|---|
| கணிதம் | V.N.பத்மநாதன் | V.N.பத்மநாதன் |
| | B.குகதாசன் | S.அருட்செல்வம் |
| விஞ்ஞானம் | A.தபேசன் | R.திருப்புகழ் |
| | T.தீபன் | M.முகுந்தன் |
| தமிழ் | N.கணேசமூர்த்தி | N.P.செல்வி |
| | S.கண்ணன் | S.கண்ணன் |
| ச.கல்வி | S.ஜெயா | S.ஜெயா |
| | S.சந்திரன் | S.சந்திரன் |
| | T.அரங்கன் | T.அரங்கன் |
| ஆங்கிலம் | Y.விஜயபாஸ்கர் | K.குமாரவேலு |
| | S.சூரி | |
| சமயம் | T.ஸ்ரீ | T.O.பவன் |
| | S.கண்ணன் | S.கண்ணன் |
| வணிகக்கல்வி | N.சிவதாசன் | S.நித்தி |

ஆரம்பம்:~

நாளை (10.12.2001) திங்கள் மாலை 3 மணி

(95735) - நிர்வாகி



## கணக்காளர், விற்பனையாளர்கள் தேவை

**கணக்காளர்:**

மூன்று மொழிகளும் சரளமாகத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர், நகரத்துக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**விற்பனையாளர்கள்:**

சைக்கிள் உதிரிப்பாகங்கள் பற்றித் தெரிந்த, அனுபவம் வாய்ந்த இருவர் தேவை.

இன்று (09.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

*குறிப்பு:* இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சுத்தமான வெள்ளை எள்ளு விற்பனைக்கு உண்டு.

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2813 (C/19679)



இணைத்து விட்டீர்களா?
உங்கள் சிறுவர்களை






**A/L 2002**

துரித மீட்டல், வினா விடை வகுப்பு

நாடகமும் அரங்கியலும்

ஆரம்பம்:

10.12.2001 திங் - 10.00மணி

BY: T.J.சுதன்

**Beacon**

யாழ். (95724)



**இலவச கணனிப் பயிற்சி**

க.பொ.த.
உயர்தரப் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்கள்
கணனிப் பயிற்சி நெறிக்காக
15-12-2001ஆம்
திகதிக்கு முன் விரைவாக
விண்ணப்பங்களை
மேற்கொள்ளவும்.

- Director UNIVAC.

(95729)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
06
☆
07
☆
1927



மறைவு
10
☆
11
☆
2001

### திருமதி
### நாகமுத்து செல்லப்பாக்கியம்

*அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து*
*நல்வழி காட்டிய எமது அன்னையே!*
*மாதம் ஒன்று கடந்தபோதும் உங்கள் நினைவுகள்*
*எம்மைவிட்டு என்றும் அகலாது. ஆறாது எம் நெஞ்சம்*
*விழிகள் தேடும் இடமெல்லாம் உங்கள் உருவந்தான் தெரிகிறது*
*உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்னையின் பிரிவுச் செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வந்து பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பு இதயங்களுக்கும், உடன் வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், தந்தி, கடித மூலம் இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும், எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*நாளை (10.12.2001) திங்கட்கிழமை* எமது இல்லத்தில் நடை பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
நா.பாலேந்திரன்,
*ஆலடி ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.* (95427)

பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org